198

உ

ஸ்ரீராமஜெயம்.

12 OCT 1915



# பரமதயாநிதி தோத்திரம்.

இஃது

பெனுகோண்டா

இரண்டாவது கிரேட் பிளீடர்

**N.** சோமசுந்திரமய்யர் அவர்களால்

இயற்றப்பட்டு

மதுரை, ஷண்முகவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1915
MADRAS

உ

கணபதிதுணை.

# பரமதயாநிதி தோத்திரம்.

1. பக்தியுடன் உன்னைப்பாடத் துணிந்தேனே பரமதயாநிதியே
எனக்கு
சக்தியைத்தந்ததை சாதிக்கச்செய்வாயே பரமதயாநிதியே

2. பக்தர்க்கிரங்கும்நீ பக்தவத்ஸலனன்றோ பரம
உனது
பக்தனல்லவோ நானும் பிரணவஸ்ரூபனே பரம

3. பண்ணின பாபங்கள் எண்ணத்தொலையாதே பரம
நான்
எண்ணின எண்ணங்கள் ஏட்டிலடங்காதே பரம

4. எத்தனை ஜென்மங்கள் எடுத்தேனோ அறியேனே பரம
இன்னும்
எத்தனை ஜென்மங்கள் எடுப்பேனோ அறியேனே பரம

5. கன்மங்கள் செய்யவோ கஷ்டப்படுகின்றேன் பரம
மனம்
ஜென்மங்கள் வருமென்று சிந்தனைசெய்குதே பரம

6. காலனும் வந்தென்னை கைப்பற்றுவானய்யா பரம
அதற்குமுன்
சீலமுடனே சிவபூசையைச் செய்வேனே பரம

7. உத்தமனே உந்தன் பாதம் பணிந்தேனே பரம
எந்தன்
சித்தம் தெளிவிப்பாய் சின்மயரூபனே பரம

8. கல்லாதவனென்று கைவிடலாகுமோ பரம
வெகு
உல்லாஸத்துடனுந்தன் ஸந்நிதி சேர்ந்தேனே பரம

9. பாசங்களும் என்னைப் பற்றியிழுக்குதே பரம
நான்
மோசம்போகாமலென் மோகத்தைத்தீர்ப்பாயே பரம

10. சிற்றின்பந்தன்னிலென் ஜென்மத்தைப்போக்காமல் பரம
நல்ல
கற்றவரின்வழி காண்பிக்கவேணுமே பரம

11. வீணனவேலையில் காலத்தைக்கழித்தேனே பரம
நீரும்
வேணுமென்றே என்னை வேடிக்கை பார்க்கின்றீர் பரம

12. சங்கர சங்கர சங்கரவென்றேனே பரம
என்னை
மங்கையர் மயக்கத்தில் மூழ்காமற் செய்வாயே பரம

13. ஒன்பது வழியுள்ள ஊத்தைச்சரீரத்தை பரமதயாநிதியே
எல்லோரும்
அன்புடன் வளர்க்கின்றார் அறியாமல் அய்யய்யோ பரம
14. தேகம் நிலையன்று யென்று தெரிந்தும் நான் பரம
தினம்
மோகத்திலேயே மூழ்கிக் கிடக்கின்றேன் பரம
15. நேற்றைக் கிருந்தோரும் இன்றைக்கு நீறுவார் பரம
உன்னை
போற்றுகிறேன் எந்தன் புன்மை தவிர்ப்பாயே பரம
16. உற்றுற்றுப்பார்த்தாலும் உலகம் நிலையல்ல பரம
எந்தன்
பற்றுக்களறு படப்பற்றினேனுந்தனை பரம
17. வெட்டின மரம்போலே விழுமிந்ததேகமே பரம
என்னை
கட்டியணைந்தோரும் கைவிடுவாரப்போ பரம
18. ஆல ஆல விஷந்தன்னை யுண்டவா-- பரம
இந்த
ஞாலத்தில் படைத்தெந்தன் ஞானத்தைத்துடைத்ததேன் பரம
19. அந்த காரந்தன்னிலழுந்தி நானலையவோ பரம
நீரும்
விந்தையாகவே என்னை வேதனை செய்கின்றீர் பரம
20. அம்மம்மா வென்று நானலறியழுதாலும் பரம
என்னை
சும்மாயிருவென்று சொல்வாருமிலரய்யா பரம
21. ஆதிமூலமென்றலறின யானைக்கு பரம
நீ
ஆதரவுடன் வந்து ஆபத்தைத் தீர்த்தாயே பரம
22. காமக்ரோதங்களை கட்டி யெறியவேணும் பரம
அதுசெய்தால்
நீமமுடனே மெஞ்ஞானமும் நல்குவாய் பரம
23. கானகம் சென்றாலும் கவலைதான் தீருமோ பரம
மன
வானரந்தன்னையே வசமாக்கிக்கொள்ளவேணும் பரம
24. கூட்டம் கூட்டமாகக்கூடுவர் உறவினர் பரம
பொம்மல்
ஆட்டமல்லவோ யிந்தப்புவிதன்னில் வாழ்கையும் பரம
25. நண்பரைப்போலவே நடிப்பரிச்செகத்தோரும் பரம
அவரை
நம்பினபேர்களும் நட்டாற்றில் நிற்பரே பரம
26. செல்வமென்றேசொல்லும் மானிடச்செல்வத்தை பரம
நலல்
கல்வியைக்கற்றோரும் புல்லெனக்கருதுவர் பரம

27. நித்தியமான செல்வம் நின்பாதமல்லவோ பரமதயாநிதியே
சொல்வாய்
நித்திய மங்களகர நிர்மலஸ்வரூபனே பரம

28. ஏனிந்த ஜென்மத்தை எனக்கு நீ தந்தது பரம
மற்றும்
மானிலந்தன்னிலேன் மயங்க நீ வைத்தது பரம

29. நீர்க்குமிழிபோலவே நீங்குமிக்காயமே பரம
இது
யார்க்கும் தெறிந்ததே யான் சொல்ல வேண்டுமோ பரம

30. ஸம்ஸாரமென்பதோர் ஸாகரமய்யனே பரம
வெகு
இம்சை கொடுப்பது இதுவேண்டா மினிமேலே பரம

31. நீருள்ள குளமய்யா நீசஸம்ஸாரமே பரம
நீர் வற்றினல்
யாரும்மதியாரே யக்குளந்தன்னையே பரம

32. எல்லையேயில்லாத பாமர ஜென்மமோ பரம
வெகு
தொல்லையப்பா இதைத்தொலைப்பதே நலமய்யா பரம

33. எச்சிலைப்பாண்டத்தை எப்போ யிழப்போமோ பரம
அதற்குமுன்
பச்சிலை கொண்டுன்னைப் பூசிக்கவேணுமே பரம

34. மாடகூடங்களும் மங்கையர் மோகமும் பரம
யாதும்
கூடவருகுமோ கூற்றுவனழைத்தாலோ பரம

35 ஆசைப்பிசாசுக்கு அளவில்லை அய்யனே பரம
அதனல்
மோசம் வருமென்று மூடர்களறியாரே பரம

36 எக்காலந்தன்னிலோ எந்தவிடத்திலோ பரம
மண்ணுன
இக்காயமிறக்குமே எல்லோருமறிவாரே பரம

37. இரத்தலைக்காட்டிலும் இறப்பது நலமன்றோ பரம
எனக்கு
மரணமே நலமுன்னை மறப்பதைக்காட்டிலும் பரம

38. துச்சமய்யா யிந்தத்தொல்லுலகச்சுகம் பரம
நான்
இச்சிப்பதே உக்தனின்பமடைதலே பரம

39. பஞ்சபூதங்களும் படர்ந்தவிப்பாண்டமோ பரம
வெகு
வஞ்சனையுள்ளது வேதனை கொடுப்பது பரம

40. இல்லறவாழ்கையே இடும்பைகளைத்தரும் பரம
இதை
வெல்லவுங்கூடுமோ வேதாந்த விளக்கின்றி பரம

Q22147 NLS

41. முவ்வகைக்கர்மமும் மும்மலக்காயமும் பரமதயாநிதியே
எனக்கு
எவ்வகை தீருமோ எப்படிப்போகுமோ பரம
42. ஆங்காரமென்பதோர் மதங்கொண்டயானையே பரம
அது
நீங்கினலல்லவோ நின்னின்பமுண்டாகும் பரம
43. உற்ருரும் பெற்ருேரும் உறவினரெல்லோரும் பரம
உலகப்
பற்றுக்களைப் பத்துமடங்காகப் பெருக்குவர் பரம
44 எனதென்ற ஆணவம் என்னைவிட்டாலன்ருே பரம
எல்லாம்
உனதென்ற உண்மையும் உள்ளேதாேனுங்குமே பரம
45. நிறையாத கிணரய்யா நீ படைத்த வயிறு பரம
என்னல்
அறயவுங்கூடுமோ அதுசெய்யுந்துன்பத்தை பரம
46. பாழான கிணரய்யா பாவிபெற்ற வயிறு பரம
இத்துடன்
வாழ்வதுமரிதய்யா வந்து நான் முறையிட்டேன் பரம
47. உந்தனுடன் சொன்னலொன்றையுங்கேளாயே பரம
நீயோ
மந்தஹாஸனனல் மௌனகுருவன்ருே பரம
48. தேகாபிமானத்தால் விளைந்ததித்துன்பமே பரம
இந்த
சோகத்தைத் தீர்ப்பாயே சுந்தரரூபனே பரம
49. அரிஹரனென்றென்று அறியும்வகையேது பரம
அந்த
பெரியவழிதன்னை யறிந்தோரே பெரியவர் பரம
50. பொறிகளையடக்கின புலவர்களல்லவோ பரம
உந்தன்
நெறிதன்னை யறிவார்கள் நித்தியஸ்வரூபனே பரம
51. நானென்றகம்பாவம் நம்மைவிட்டாலன்ருே பரம
எல்லாம் நீ
தானென்ற தன்மையும் தானகவேதோன்றும் பரம
52. ஜனனமரணமென்ற சமுத்திரஞ் சேராமல் பரம
இருக்கவே
மனனம் செய்யவேணும் மனதினிலுன்னையே பரம
53. பஞ்சேந்திரியங்களை யடக்கி பஜித்தால்தான் பரம
நீயும்
அஞ்சலஞ்சலென்ற பயமளிப்பாயே பரம
54. ஊரிலுள்ளோரெல்லாம் ஒன்ருக வந்தாலும் பரம
யமன்
உரிதன்னை யறுக்கவோ ஒருவருமில்லையே பரம

55. மண்டலமாள்வோரும் மரணமடைவாரே பரமதயாநிதியே
உனக்கு
தொண்டுகள் செய்வோரும் தண்டனையடையலாமோ பரம

56 ஆனந்தத்தாண்டவ மாடின அய்யனே பரம
பிரம்
மானந்தந் துந்தன் ஆளாக்கிக்கொள்வாயே பரம

57. அண்டம்புகழ்ந்திடும் மானந்தரூபனே பரம
உன்னை
கண்டுகளிக்கவென் சிந்தைகலங்குதே பரம

58. பக்தியுடனுன்னை பஜனைசெய்தாலன்றோ பரம
யார்க்கும்
முக்திகொடுப்பாய் நீ மூலஸ்வரூபனே பரம

59. சற்றாகிலும் மனம் சஞ்சலமின்றியே பரம
ஞானம்
பெற்றவருமுன்னை உள்ளத்தில் பஜிப்பரே பரம

60 சரணமடைந்தேனே சங்கர சம்போ நீ பரம
உன்னை
மரணகாலந்தன்னில் மறவாமற் செய்வாயே பரம

61. சித்தத்தில் நின்னையே சிந்தித்தாலல்லவோ பரம
அவர்
சித்தந்தெளியுமே சித்தியும் பெறலாமே பரம

62. உள்ளந்தெளிந்தால்தான் உன்பாதஞ் சேரலாம் பரம
அன்றேல்
மெள்ளமெள்ளவே பவபள்ளத்தில் விழவேணும் பரம

63. அந்தரங்கந்தன்னிலனுதினம் பஜிப்பேனே பரம
என்னை
அந்தியகாலந்தன்னி லாதரிப்பாய் நீயே பரம

64. எத்தனை கற்றாலும் மென்னப் பிரயோஜனம் பரம
கற்றவர்
அத்தனையும் முனக்கு அர்ப்பிதம் செய்யவேணும் பரம

65. நரஸ்துதிசெய்வதில் நலமொன்று மில்லையே பரம
ஆகையால்
பரப்ரம்மஸ்வரூபனே உன்னைப்புகழவேணும் பரம

66. பற்றுதலொழிதலே பக்தர்தொழிலய்யா பரம
எவர்க்கும்
பற்றுதலொழிந்தால்தான் பரமபதமுண்டு பரம

67. பக்தர்படுந்துன்பம் போக்குவதுன்தொழில் பரம
அவர்க்கு
பக்தியுடனுன்னை பஜிப்பதே தொழிலய்யா பரம

68. வாதுகள்செய்யவோ வல்லவர் பலருண்டு பரம
மெஞ்ஞானம்
போதிக்கும் புலவர்கள் புவிதன்னிலருமையே பரம

ஆவணக்காப்பக சென்னை 147624

69. ஸாதுக்கள் ஸங்கமே சாந்தகுணந்தரும் பரமதயாநிதியே
என்று
வேதங்களோதிய வேதியர் சொல்வாரே பரம

70. அனுபவந்தன்னிலு மதுசரிதானய்யா பரம
சங்கிப்போர்
அனுஷ்டித்துப்பார்க்கலா மதற்குத்தடையுமுண்டோ பரம

71. சாந்த குணத்தையே சாதிக்கவேணுமே பரம
அது
காந்தம்போலே யுந்தன் கருணையையிழுக்குமே பரம

72. தாமரையிலைதன்னில் நீர்த்துளிபோலவே பரம
இந்தப்
பாமரஜென்மத்தில் புருடனுமிருக்கவேணும் பரம

73. எட்டுத்திசைகளும் எங்கும் நிறைபொருளே
உன்னை பரம
இட்டமுடனேயிந்த விருதயத்திலிருத்தவேணும் பரம

74. தேசந்திரிந்தாலும் தேகமிளைத்தாலும் பரம
மனப்
பாசங்கள்போகுமோ பக்குவமாகுமோ பரம

75. எத்தேசஞ்சென்றாலும் ஏதேதுசெய்தாலும் பரம
எல்லாம்
உத்தேசமொன்றுதான் உன்னையடைதல்தான் பரம

76. வீடுகள்தோறுமே வாசல்கள் பலவுண்டு பரம
உந்தன்
வீடுசேரவென்றால் வாசலொன்றுதானே பரம

77. நற்குணநற்செய்கை நல்லவர் ஸ்நேகமும் பரம
உந்தன்
நிர்க்குண ரூபத்தை நிரூபிக்கவல்லது பரம

78. அல்லும்பகலுமுன்னை அருச்சித்தாலல்லவோ பரம
எந்த
வல்லவருமுந்தன்கழல் வந்தடையலாம் பரம

79. கூற்றுவன் வந்தாலும் கூசாமலேதானே பரம
உன்னை
போற்றிப்புகழ்வதே உத்தமர் லக்ஷணம் பரம

80. உருக்கமுடனுன்னை உள்ளத்தில் நினைவேனே பரம
நீயும்
செருக்கின்றி சீக்கிரம் சிறுவனைக் காப்பாயே பரம

81. ஓமென்றுதித்தநீ ஓங்காரரூபனே பரம
மற்றும்
ஆமென்றெழுதிய அக்ஷரவடிவனே பரம

82. எளியவனென்றென்னை இகழ்ந்துவிட்டீரானால் பரம
உந்தன்
ஒளிவந்தெனக்குள்ளே ஓங்குவதெவ்வகை பரம

83. சோமரித்தனத்தினல் சுத்தனைத்துதியாமல் பரமதயாநிதியே
புவிதன்னில்
ஏமாந்துபோனவரெத்தனை கோடியோ பரம

84. ஏகாந்தமாகவே யுன்னைத்துதிக்கவேணும் பரம
அப்போ
ஸ்ரீகாந்தனே நீயும் சீக்கிரம் வருவாயே பரம

85. நாதாந்தரூபனே நின்னைத்துதிப்போர்க்கு பரம
நிஜமே
வேதாந்தமார்க்கமும் தானே வந்தெய்துமே பரம

86. அன்புடனுன்னையே ஆராதிப்போர்களே பரம
உந்தன்
இன்பமடைவார்களிகபரந்தன்னிலும் பரம

87. அப்பனென்றேயுன்னை அழைப்பேனே நானுமே பரம
எந்தன்
சொப்பனந்தன்னிலும் சுகத்தை நீ கொடுப்பாயே பரம

88. சமயங்கள்வேறென்று சாற்றினபோதிலும் பரம
எல்லாச்
சமயங்கள் தன்னிலுஞ்சஞ்சரிப்பவன் நீயே பரம

89. மாயையினல்வரும் மயக்கத்தைத்தீராயோ பரம
எனக்கு
தாயுந்தந்தையும் நீயே தாரணிதன்னிலே பரம

90. அன்னையைப்போலவே ஆதரிப்பாய் நீயே பரம
ஏனென்றால்
உன்னைவிடவெனக் குறவினரில்லையே பரம

91. நாரணனேயுன்னை நம்பினபேருக்கே பரம
உந்தன்
பூரணமான கருணைபுரிகுவாய் பரம

92. ஓராமாவென்றுன்னை ஒருதரம் ஸ்மரித்தாலும் பரம
அவர்க்கு
வாராத செல்வமும் தானே வந்தணுகுமே பரம

93. அல்லும்பகலுமுன்னை யருச்சிப்போரடைகின்ற பரம
செல்வத்தை
சொல்லவும் வேண்டுமோ சுத்தஸ்வரூபனே பரம

94. தருணமிதல்லவோ தமியேனைக்காக்கவே பரம
உன்னை
சரணமடைந்தேனே சத்தியஸ்வரூபனே பரம

95. அற்புதமானவுன்னருளடைந்தாலன்றோ பரம
எவர்க்கும்
தற்போதமழியுமே தத்துவந்தழைக்குமே பரம

96. ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவரல்லவோ பரம
பர
மாத்மஸ்வரூபனே உன்னையடைவார்கள் பரம

97. ஆடம்பம்பரம்போ லடங்குமித்தேகமே பரமதயாநிதியே
ஆகையால்
தேடிவந்தேனுந்தன் தெரிசனந்தருவாயே பரம

98. துய்யனே யென்றுன்னையே தோத்திரஞ்செய்வேனே பரம
அய்யா
மெய்யனன்றோ நீயும் மெஞ்ஞானக்குன்றன்றோ பரம

99. சாஸ்திரந்தன்னையே சோதித்துச்சொல்வோரும் பரம
அதனை
வாஸ்தவமாகவே வழக்கத்தில் தரவேணும் பரம

100. உன்னுமமுன்னுதலொன்றே சன்மார்க்கமே பரம
மற்றெல்லாம்
சன்மார்க்கமாகுமோ ஸத்குணரூபனே பரம

101. பித்தனைப்போலே நான் பிதற்றுகிறேனய்யா பரம
உனக்கு
எத்தனைசொன்னாலு மேதுக்குமனமில்லை பரம

102. நிச்சியமாகவே நின்கழலே கதி பரம
நீனே
சச்சிதானந்தரூபனே ஸத்குருநாதனே பரம

103. சோதிப்பதேதுக்கு ஜோதிஸ்வரூபனே பரம
உந்தன்
பாதிசரீரத்தைப் பார்வதிகொண்டாளே பரம

104. மண்ணுண்டமாதவா மயக்கத்தைத் தீராயோ பரம
எனக்கு
கண்ணபிரானேநீ கருணைபுரிகுவாய் பரம

105. பக்ஷிவாகனா என்னை பக்ஷத்துடன் காவாய் பரம
உந்தன்
வக்ஷஸ்தலந்தன்னில் லெக்ஷிமி வாழ்ந்தாளே. பரம

106. வேதியர்புகழ்ந்திடும்வேதாந்த ரூபனே பரம
உன்னுடன்
வாதிக்கமுடியாது வந்தென்னைக்கார்ப்பாயே பரம

107. குருவென்று உன்னையே கும்பிட்டேனய்யனே பரம
எவர்க்கும்
குருவின்றியுந்தனின் குறிப்பறியக்கூடாதே பரம

108. வந்தனந்தந்தேனுன் வணக்கத்துடனுந்தன் பரம
பாதார
விந்தத்தில் சேர்ப்பாயே மந்தஹாஸன் நீயே பரம

109. பாடினபக்தன் நான் சோமசுந்தரனய்யா பரம
இப்போ
ஓடிவந்தென்னைநீ உகந்து ரக்ஷிப்பாயே

முற்றிற்று.

147824